Reg. No. : ....................................

Name : .......................................

**Code No. 9008**

**Second Year – March 2018**

Time : 2 ½ Hours
Cool-off time : 15 Minutes

Part – II

# TAMIL

Maximum : 80 Scores

***General Instructions to Candidates :***

- There is a 'Cool-off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.
- Calculations, figures and graphs should be shown in the answer sheet itself.
- Give equations wherever necessary.
- Electronic devices except non-programmable calculators are not allowed in the Examination Hall.

**1 முதல் 3 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக. மதிப்பெண் ஒன்று வீதம்** **(3 × 1 = 3)**

1. குலுக்கைகள் நிரம்பின
வீடு நிறைய மூடைகள் – அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் தருக ?

(அ) நெல் (ஆ) பத்தாயம்
(இ) உழவு (ஈ) நிலம்

2. "சூடாவாகை" என்பது எதைக் குறிக்கும் சொல்.

(அ) வெந்தி (ஆ) மரம்
(இ) வேங்கை (ஈ) புலி

3. பழங்காலத்தில் சிவன் கோவில்களுக்கு விடப்பட்ட தான நிலங்களை எவ்வாறு அழைத்தனர் ?

(அ) பிரம்மதேயம் (ஆ) தேவதானம்
(இ) பள்ளிச்சந்தம் (ஈ) திருவிடையாட்டம்

**4 முதல் 7 வரையுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக. மூன்று மதிப்பெண் வீதம்** **(4 × 3 = 12)**

4. குறிஞ்சிப்பாட்டில் கபிலர் கூறும் 'அநத்தொடு நிற்றல்' பண்பு குறித்து எழுதுக.

5. முக்கூடற்பள்ளு உணர்த்தும் மழைக்கால நிலையை வருணனைக் குறிப்பாக எழுதுக.

6. உடற்பயிற்சியின் மூலம் ஏற்படும் நன்மைகளை குறித்துச் சிறுகுறிப்பு எழுதுக.

7. 'இருட்டறையில் உள்ளதடா உலகம்' என்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் கூற்றிற்கான விமர்சனக் குறிப்பு எழுதுக.

**8 முதல் 11 வரையுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக. நான்கு மதிப்பெண் வீதம்** **(4 × 4 = 16)**

8. "குத்து முத்துச் சம்பா
குடமல்லிச் சம்பா
மல்லிகைச் சம்பா
மணமுள்ள சம்பா"
இப்பாடலின் வரிகளை நயம்பாராட்டி எழுதுக ?

9. உங்கள் பள்ளியில் நடைபெறும் கலைவிழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்க வருகைதர உள்ள கூத்துக் கலைஞர் பி. தம்புரான் அவர்களிடம் நேர்முகப் பேட்டி காண்பதற்குப் பொருத்தமான 6 வினாக்கள் தயார் செய்க ?

10. 'வலைக்குள் வலை' என்னும் கதையின் வாயிலாக இணையதளத்தின் தவறான பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகளை அறிந்த நீங்கள் கதையின் ஆசிரியருக்கு வாசகர் கடிதம் எழுதுக.

11. உங்கள் பகுதியில் காணலாகும் ஏதேனும் ஒரு நாட்டுப்புற விளையாட்டு குறித்து விளக்குக ?

**12 முதல் 15 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விடை எழுதுக? 5 மதிப்பெண் வீதம்** **(3 × 5 = 15)**

12. 'மண்நேசம்' என்னும் சிறுகதை உணர்த்தும் கருத்தின் அடிப்படையில் நகரமயமாதலின் விளைவுகளை மக்கள் உணரும் வண்ணம் துண்டுப்பிரசுரம் தயார் செய்க?

13. 'பேராசையின் பரிசு' எனும் சிறுகதை கூறும் நாட்டுப்புற மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சித்தரிக்க?

14. ஆரோக்கிய இதழில் வெளியிடும் பொருட்டு இயற்கை உணவின் அவசியம் குறித்துப் பெட்டிச் செய்தி தயார் செய்க?

15. 'குழந்தைகளுக்காகப் புதிய உலகத்தைப் படைத்துள்ளார் கைலாஷ்' இக்கருத்திணை அவருடைய வாழ்க்கைச் சூழலோடு ஒப்பிட்டு விளக்கு?

**16 முதல் 19 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விடை எழுதுக. ஆறு மதிப்பெண்கள் வீதம்** **(3 × 6 = 18)**

16. "விஷ மருந்துகளும்
உப்பு உரங்களும்
நம்ம நிலத்தைப் புண்ணாக்கி
நம்ம நிலத்தை குந்நுயிர் ஆக்கிவிட்டன"

இப்பாடல் வரிகளின் துணை கொண்டு இரசாயன உரங்களால் ஏற்படும் பாதிப்புக்களை மக்களுக்கு எடுத்துக் கூறும் வகையில் வானொலி உரை தயார் செய்க?

17. "விழாக்கள் பண்பாட்டின் வெளிப்பாடே" இக்கருத்துப்படி நீங்கள் கொண்டாடும் ஏதேனும் ஒரு விழா குறித்து எழுதி, அதில் காணலாகும் பண்பாட்டுக் கூறுகளை விளக்குக?

18. அறிவியல் தின விழாவில் உரையாந்துவதற்காக 'அறிவியலும் வானவியல் தத்துவங்களும்' என்னும் தலைப்பில் சொற்பொழிவுரை தயார் செய்க ?

19. அய்யங்காளியும், காந்திஜியும் சந்தித்த போது நடைபெற்ற உரையாடல்களிலிருந்து நீங்கள் பெற்ற அனுபவத்தை அனுபவக் குறிப்பாக எழுதுக ?

**20 முதல் 22 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடை எழுதவும். எட்டு மதிப்பெண்கள் வீதம்** **(2 × 8 = 16)**

20. பள்ளி ஆண்டு மலரில் வெளியிடும் பொருட்டு 'யோகாவும் உடல்நலமும்' என்னும் தலைப்பில் விழிப்புணர்வுக் கட்டுரை தயார் செய்க ?

21. உங்கள் பள்ளி கலையரங்கில் நடைபெறும் கருத்தரங்கில் உரையாந்துவதற்காக 'இணையதளமும் இளைஞர் சமுதாயமும்' என்னும் தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை தயார் செய்க ?

22. சமூகச் சீர்திருத்த மாநாட்டில் பங்கேற்பதற்காக கேரளச் சமூகச் சீர்திருத்தச் செம்மல் திரு. நாராயணகுருவின் சீர்திருத்தப் பணிகள் குறித்து சிறப்புக் கட்டுளை ஒன்று தயார் செய்க ?